மலர் 1[illegible] இதழ் 200 | NAVAMANI (Tamil Daily) MADRAS | 4 பக்கம் 15 காசு விமானப் பதிப்பு 18 காசு
REGD NO M 7897 | Phone No. 76190—76199

மா நகராட்சிகமிஷனர்
வீட்டு முன்பாக
மந்திரி கிளர்ச்சி
—2-ம் பக்கம்

நவமணி


கூட்டுறவு முறையில தொழிலாளர்கள் நடத்தும் ஒரே தமிழ்த் தினசரி

சென்னை 2—4—73 புதன் | வெளியூர் 3—5—73 வியாழன்

• திண்டுக்கல்லில் தேர்தல் பிரசாரம்

அண்ணா தி. மு. க. மீது மந்திரி மோகன் தாக்கு

திண்டுக்கல், மே, 2—திண்டுக்கல் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசார அலுவலகங்களைத் திறந்து வைத்த மத்திய உருக்கு அமைச்சர் மோகன் குமாரமங்கலம் அண்ணா தி. மு. கழகத்தைத் தாக்கிப் பேசினார்.



"அண்ணா தி. மு. கழகத்துக்குப் பொருளாதாரக் கொள்கை எதுவும் இல்லை. விசாரணைக் கமிஷன் வேண்டும் என்பது ஒன்றுதான் அதன் நோக்கமாகத் தோன்றுகிறது" என்றார் மோகன் குமாரமங்கலம்.

"திண்டுக்கல் உபதேர்தல் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது" என்றும் மோகன் குமாரமங்கலம் கூறினார்.

திண்டுக்கல் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் சீமைச்சாமியை ஆதரித்து மோகன் குமாரமங்கலம் பல இடங்களில் பேசினார்.

அவர் நான்கு இடங்களில் இந்திரா காங்கிரஸ் தேர்தல் பிரசார அலுவலகங்களையும் திறந்து வைத்தார்.

மோகன் பேச்சு

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அவர் பேசுகையில் கூறியதாவது:—

திண்டுக்கல் உபதேர்தல் முக்கியத்துவம் கொண்டதாகும். ஏனெனில் காங்கிரஸ் கட்சி பிளவு பட்டதற்குப் பிறகு இப்போதுதான் முதல் தடவையாக தமிழ்நாட்டில் சொந்தமாக வேட்பாளரை நிறுத்தியுள்ளது. பிரதமர் இந்திரா காந்தி மீதும் அவருடைய சோஷலிசக் கொள்கைகள் மீதும் மக்களுக்குள்ள நம்பிக்கையை மதிப்பிட இத்தேர்தல் உதவும்.

பலப்பரீட்சை

தவிர, [illegible]மு. க—அண்ணா தி. மு. க. இடையில் நடை பெறும் பலப் பரீட்சையில் ஒரு முடிவுகாண இத்தேர்தல் உதவும்.

அந்தவகையில் இத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அண்ணா திமு கழகம் பிரிந்ததால் தங்கள் கட்சியின் பலம் குறைந்துவிடவில்லை என்றும் மக்களிடையே தி. மு. க.வுக்கு செல்வாக்கு குறைந்து விடவில்லை என்றும் கருணாநிதி கூறிவருகிறார்.

ஆனால் அண்ணா திமுக தலைவர் எம். ஜி. ராமச்சந்திரனும் அவருடைய நண்பர்களும் தி. மு. க.வில் தவறான வழியில் பணம் சம்பாதிக்க முற்பட்டுள்ளவர்களைத் தவிர, கழகத்தினர் அனைவரும் அண்ணா தி. மு. க. வில் சேர்ந்துவிட்டதாகக் கூறி வருகிறார்கள்.

இவ்வித நிலையில் இந்த இரு கட்சிகளுக்குள்ள பலத்தை அறிய இத் தேர்தல் உதவும்.

மோகன் மேலும் பேசுகையில் கூறியதாவது!—அண்ணா தி.மு. கழகத்துக்குப் பொருளாதாரக் கொள்கை எதுவும் இல்லை. தி. மு. க. அமைச்சர்கள் மீதான ஊழல் புகார்களைப் பற்றி விசாரிக்க விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படவேண்டும் என்பது ஒன்றே அக்கட்சியின் நோக்கம் என்று தோன்றுகிறது.

இது போன்ற ஊழல்புகார் மனுக்களைக் கொடுக்க அக்கட்சிக்குப் பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் தேவையா என்று கேட்கத் தோன்றுகிறது. ஏனெனில் ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் நேரடியாக மத்திய அரசிடம் மனுக்கொடுக்கலாம்.

மார்க்சிஸ்ட்

அண்ணா திமுக.வை ஆதரிக்கும் மார்க்சிஸ்ட் கட்சியை மோகன் குறிப்பிட்டு, பிரதமர் இந்திரா காந்தியை எதிர்ப்பது தவிர, அதற்கு இத்தேர்தலில் வேறு அக்கறையே இல்லை என்றார்.

தி. மு. க.

தி. மு. க.வைப் பற்றி அவர் குறிப்பிட்டு, அக்கட்சி தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அக் கட்சி தனது கட்சிக்காரர்கள் பலன் பெறவே உதவியுள்ளது என்றார்.

"காமராஜரைப்பொருத்த வரையில் அக்கட்சியில் அ[illegible] ஒருவர்தான் முக்கிய தலைவர். 1971 தேர்தலில் அக்கட்சி தோல்வியுற்று பார்லிமெண்டில் அது பலமற்றுப் போய் விட்டது" என்றார் மோகன் குமாரமங்கலம்.

யாருக்கு ஓட்டு

"யாருக்கு ஓட்டுப் போட வேண்டும் என நான் உங்களுக்கு கட்டளையிட விரும்பவில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சிஒன்றுதான் சோஷலிசத் திட்டங்களை அமுல் படுத்தும் அளவுக்குப் பலம் பெற்று விளங்குகிறது. திண்டுக்கல் வாக்காளர் காங்கிரசுக்கு ஓட்டு போட இது ஒன்றே போதுமான காரணமாகும்" என்று மோகன் கூறினார்.

இந்திரா பெங்களூர் வருகிறார்

பெங்களூர், மே 2—பிரதமர் இந்திரா காந்தி 4ந் தேதி மாலை பெங்களூர் வந்து சேருவார்.

அன்றைய தினம் அவர் ஸ்ரீரங்கப்பட்டினத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவார்.

மறுநாள் அவர் பெங்களூரில் தெற்கு மண்டல இந்திரா காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு அன்றைய தினமே ஆக்ராவுக்குப் பயணமாவார்.

கருணாநிதி பேச்சு

கம்யூனிஸ்டு கட்சிகளின் கோபம் எங்களுக்கு பெரிது அல்ல

சென்னை; மே 2— "தி. மு. க. மீது இரு கம்யூனிஸ்டு கட்சிகள் கொண்டுள்ள கோபம் எங்களுக்குப் பெரிதல்ல. ஏற்றுக்கொண்ட சமதர்மத் திட்டங்களை நிறைவேற்றியே தீருவோம்" என்று முதலமைச்சர் கருணாநிதி கூறினார்.

சென்னையில் நேற்று நடந்த மே தின விழாக் கூட்டத்தில் பேசுகையில அவர் இவ்வாறு சொன்னார்.

"திண்டுக்கல் தொகுதியில் அண்ணா தி. மு. கழகத்தை ஆதரிக்கும் இடதுசாரி—வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களை இக்கூட்டத்தில் முதலமைச்சர் கடுமையாக தாக்கிப் பேசினார்.

கோபம் ஏன்?

அவர் பேசியதாவது!—கம்யூனிஸ்ட் கட்சி எங்கேயோ போய்விட்டது என்று அமைச்சர் ப. உ. சண்முகம் தெரிவித்தார்.

கம்யூனிஸ்டுக் கட்சிக்கு நம்மீது என்ன கோபம்? நாம் [illegible] சோஷலிசவாதிகள் இல்லை என்று கோபமா?

இடது கம்யூனிஸ்டுகளுக்கும், வலது கம்யூனிஸ்டுகளுக்கும் நம்மீது என்ன கோபம்? முற்போக்கு கொள்கைகளை நாம் சொல்கிறோம்; இவர்கள் செய்துவிடுகிறார்களே என்ற கோபம்தான்.

பெரிதல்ல

நாம் சமதர்மப் பாதையில் செல்கிறோம் ஐயா, உங்கள் கோபம் பெரிதல்ல. தொடர்ந்து சமதர்ம பாதையில் பாடுபடுவோம், என்று அழுக்கந்திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறோம்.

உழுபவனுக்கு தொழில் சொந்தம். உழுபவனுக்கு நிலம் சொந்தம். இதைச்

2-ம் பக்கம் பார்க்க



புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் எண்பத்து இரண்டாவது பிறந்த நாள் விழா காந்தி திடலில் 29ந் தேதி நடந்தது பாண்டிச்சேரிமுதல்வர் பாரூக் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மாநில கவர்னர் சேதிலால் புரட்சிக் கவிஞரின் உருவச் சிலையைத்திறந்துவைத்தார்.

திண்டுக்கல்லில்

போட்டி சுதந்திரா கட்சி: அதிமுகவுக்கு ஆதரவு


திண்டுக்கல் மே. 2—திண்டுக்கல்லில் பழைய காங்கிரஸ் வேட்பாளரை சுதந்திரா கட்சி ஆதரிப்பதை எதிர்த்து மாவட்ட சுதந்திரா கட்சித் தலைவர் பதவியை ராஜிநாமா செய்துள்ள பெருமாள்சாமி, ராஜாஜி சுதந்திரா கட்சி என்னும் பெயரில் புதிய கட்சி விரைவில் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்; அக் கட்சி அண்ணா தி மு க;வை ஆதரிக்கும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

எம். ஜி. ஆர். பேசிய கூட்டத்தில் பெருமாள்சாமி கலந்துகொண்டு அ தி மு க.வை ஆதரித்துப் பேசினார்.



திண்டுக்கல்லில் எம். ஜி. ஆர். தேர்தல் பிரசாரம்

திண்டுக்கல், மே 2—திண்டுக்கல் தொகுதியில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அண்ணா தி. மு. க. தலைவர் எம். ஜி. ஆர். பேசுகையில் "அண்ணா தி. மு. கழகம் 6 மாதக் குழந்தை" என்று குறிப்பிட்டார்.



எம்.ஜி.ஆர். பேசிய இக் கூட்டத்தில ஒரே மேடையில் எதிர் எதிரான கட்சிகளான கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி ஆகிய இரு கட்சிகளின் தலைவர்கள் அமர்ந்திருந்தனர்.

எம். ஜி. ஆருக்கு வலப்புறத்தில் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் கே டி. கே. தங்கமணி அமர்ந்திருந்தார். இடது புறம் மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் எ. பாலசுப்பிரமணியம் அமர்ந்திருந்தார்.

இதை எம். ஜி ஆர் குறிப்பிட்டு "அண்ணா தி. மு. கழகம் என்னும் குழந்தைக்கு இருவரும் இரு கைகள் போல உள்ளதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்" என்றார்.

"இக் குழந்தையை (அ.தி. மு.க.) உங்களது மடியிலே தவழவிட்டு பெருமை படுத்த வேண்டும் என்றும் எம். ஜி. ஆர்: கூறினார்.

இரு கம்யூனிஸ்டு கட்சிகளும் அண்ணா தி. மு. க.வை ஆதரிப்பதை எம். ஜி. ஆர்: குறிப்பிட்டு "இவை என்ன சுண்டைக்காய் கட்சிகளா? மாவட்டக் கட்சிகளா? மாநிலக் கட்சிகளா?" என்று கேட்டார்.

அகில இந்தியரீதியில்இயங்கும் இரு கட்சிகள் அண்ணா திமுகவை ஆதரிக்கிறது என்றால் அது ராமச்சந்திரனின் தனி [illegible]சியல் கட்சிக்காக அல்ல. நியாயமான கொள்கைளுக்காக ஆதரிக்கின்றன" என்றும் எம். ஜி. ஆர் கூறினார்.

நோட்டுமாலை

இக்கூட்டத்தில் எம். ஜி. ஆருக்கு நோட்டு மாலைகள் அணிவிக்கப்பட்டன. எம். ஜி ஆரைப் பார்க்கவும் அவருடைய பேச்சைக்கேட்கவும், மக்கள் [illegible]தில் சுவர்களிலும், [illegible]க்கிளைகளிலும், வீட்டின் கூரைகளிலும் அமர்ந்திருந்தனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு முஸ்லிம் லீக் சார்பாக யூசுப், புரட்சி பார்வார்ட் பிளாக் சார்பாக ஆண்டித்தேவர், உழைப்பாளர் பொதுநலக் கட்சிசார்பாக பிச்சைமுத்து, மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் ஏ. பாலசுப்பிரமணியம், கம்யூனிஸ்டு கட்சி தலைவர் கே. டி. கே. தங்கமணி முதலியவர்கள் பேசினர்.

போலீஸ்காவலில் அடிப்பதா? தடை விதிக்க கோபாலன் யோசனை

புதுடெல்லி. மே. 2—போலீஸ் லாக்கப்பில் இருக்கும் எவரையும் அடிக்கக் கூடாது என்று தடை விதித்து சட்டம் போட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் தலைவர் ஏ. கே. கோபாலன் மக்கள் சபையில் பேசுகையில் கூறினார்.

"லாக்கப்பில் இருப்பவர்கள் மீது கை வைக்க போலீசாருக்கு உரிமை இல்லை" என்றார் ஏ கே. கோபாலன்.

"சுதந்திரம் பெற்று ஆ[illegible]டுகளுக்குப் பிறகு இதை யாவது செய்வார்களா?" என்று அவர் கேட்டார்.

ம.பி. அரசு ஊழியர் சம்பள உயர்வு

போபால், மே 2— மத்திய பிரதேச மாநில அரசு ஊழியருக்கு ரூ. 7 முதல [illegible] 10 வரை பஞ்சப்படி [illegible]ர்த்தப்பட்டுள்ளது.

இதை மாநில முதல்வர் பி. சி. சேத்தி அறிவித்தார்.

சட்டத்துக்கு கட்டுப்பட்டு பேச்சை முடித்த முதல்வர்

சென்னை, மே 2—சென்னையில் நேற்று இரவு கருவல்லிக் கேணி கடற்கரையில் மே தின பொதுக் கூட்டத்தில் முதலமைச்சர் கருணாநிதி பேசிக்கொண்டு இருந்தபோது திடீரென்று பேச்சை முடித்துக்கொண்டார்.

மணி 10 ஆகிவிட்டது என்பதே அதற்குக் காரணம். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை காட்டமாகத் தாக்கிப் பேசிக் கொண்டு இருந்த முதல்வர் கருணாநிதி கைக் கடிகாரத்தைப் பார்த்தார். 10 ஆகிவிட்டது என்பதை அறிந்தார். அனுமதி நேரம் 10 மணியோடு முடிவடைந்து விட்டது. சட்டத்தை மீறக் கூடாது; ஆகவே என் பேச்சை முடிக்கிறேன் என்று கூறி யாரும் எதிர்பாராத நேரத்தில் பேச்சை முடித்துவிட்டார்.

சினிமா செய்திகள்
—4-ம் பக்கம்

திண்டுக்கல்லில்

காமராஜ் சூறாவளி தேர்தல் பிரசாரம்

சென்னை, மே 2— பழைய காங்கிரஸ் தலைவர் காமராஜ் திண்டுக்கல் தொகுதியில்தேர்தல் பிரசாரம் செய்ய 4ந்தேதி சென்னையிலிருந்து கிளம்புகிறார்.

அவர் திண்டுக்கல் தொகுதியில் 5 ந் தேதியிலிருந்து 19ந் தேதிவரை முகாமிட்டு சூறாவளி தேர்தல் பிரசாரத்தை நடத்துவார்.

அவர் 5ந் தேதியன்று மட்டும் திண்டுக்கல் உட்பட 4 ஊர்களில் பேசுவார்.

இத் தகவலை பழைய காங்கிரஸ் பொதுச் செயலாளர் திண்டிவனம்ராமமூர்த்தி தெரிவித்தார்.

பழையகாங்கிரஸ்கட்சியின் வெற்றிவாய்ப்பு நன்றாக உள்ளது. தொகுதிகளில் பெரும் பாலும் சாதகமான நிலை உள்ளது. நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம்" என்று அவர் ஒரு பேட்டியில் கூறினார்.

பிரெஷ்னெவுக்கு லெனின் பதககம்

மாஸ்கோ, மே 2—ரஷியக்கம்யூனிஸ்டு கட்சிப் பொதுக் காரியதரிசியான பிரெஷ்னெவுக்கு சமாதானத்துக்கான லெனின் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

"உலகில் சமாதானத்தைக் காக்க அவர் ஆற்றியுள்ள பணிக்காக இப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது" என்று ரஷிய டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் வான ஆராய்ச்சி தொலை நோக்கி

புதுடெல்லி, மே. 2—வான ஆராய்ச்சி வேலைகளுக்காக தமிழ்நாட்டில் ஜோலார்பேட்டை அருகே உள்ள காவலூரில் புதிய தொலை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இது இப்போது பயன் படுத்தத் தயாராகி விட்டதாக அ[illegible]விக்கப்பட்டுள்ளது.

கார் தீப்பற்றி எரிந்து 2 பெண்கள் பலி

சென்னை, மே, 2—மகாபலிபுரத்திற்கு உல்லாசப்பயணம் போய் திரும்பி கொண்டிருந்த கார் ஒன்று விபத்துக்குள்ளாகி தீப்பற்றி எரிந்ததால் இரு பெண்கள் அந்த இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர்.

இந்த விபத்து பல்லாவரத்துக்கு அருகில் நிகழ்ந்தது.

குரோம்பேட்டையைச் சேர்ந்த டாக்டர் வீரராகவன் என்பவரும், அவரது மனைவி, அத்தை, மூன்று குழந்தைகள் ஆகியோரும் சென்ற கார் இவ்விதம் விபத்துக்குள்ளாகியது.

ஒரு சைக்கிளுடன் மோதுவதைத் தவிர்க்க காரைத் திரும்பிய போது அது விளக்குக் கம்பத்தில் மோதிக் கவிழ்ந்து விட்டது. சூடான எஞ்சினில் பெட்ரோல் ஒழுகியதால் கார் தீபிடித்ததாக கூறப்படுகிறது.

மிகவும் சிரமப்பட்டு வீரராகவன் மூன்றுகுழந்தைகளையும், காப்பாற்றினர். ஆனால் அவரது மனைவியையும், அத்தையையும் காப்பாற்ற முடியவில்லை.

தகவல் கிடைத்ததும் தீயணைப்புப் படையினர் ஸ்தலத்துக்கு விரைந்து தீயை அணைத்தனர்.

சென்னையில் மே தின ஊர்வலங்கள்

சென்னை, மே 2—மேதின விழாவையொட்டி சென்னையில் நேற்று பல ஊர்வலங்கள் நடைபெற்றன.

மே தினத்தை ஒட்டி நேற்று மாலை திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கப் பேரவையின் சார்பில் பெரிய ஊர்வலம் ஒன்று ஹாரிஸில் இருந்து புறப்பட்டு பொதுக்கூட்டம் நடந்த மெரினா கடற்கரைக்கு வந்தது.

பல அலங்கார வண்டிகள் அதில் வந்தன. தொழிலாளர்களுக்காக தி.மு. கழக அரசு செய்த சாதனைகள் அதில் விளக்கப்பட்டு இருந்தன.

மயில்போல அலங்காரம் செய்யப்பட்ட டிரக் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

அதற்குப் பின்னால் அண்ணாவின் பெரிய படம் இருந்தது.

திண்டுக்கல் தேர்தல் பரிசும் ஒரு டிரக்கில் காணப்பட்டது; தி மு கழகம் புலி என்று சித்தரிக்கப்பட்டு போட்டியிடும் மற்ற 3 கட்சிகளையும் பூனை போல சித்தரித்து இருந்தார்கள்.

லாரிகளில் ஆட்டமும் பாட்டும் இருந்தது. ஊர்வலத்தில் முன்னே 5 குதிரைகள் தி. மு. கழக தொழிற்சங்க கொடிகளுடன் முன் வந்தன.

உழைக்கும் மக்கள் மாமன்றம், அ.தி.மு.க. முதலியவை கூட்டாக ஒரு ஊர்வலம் நடத்தின. இந்த ஊர்வலம் நேப்பியர் பார்க்கிலிருந்து புறப்பட்டு கண்ணப்பர் திடலை வந்து அடைந்தது. இதில் சிம்சன் குரூப் கம்பெனி ஊழியர்களும், மற்ற யூனியன் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

ஏ. ஐ. டி. யு. சி. இரு ஊர்வலங்களை நடத்தியது. ஒரு ஊர்வலம் லோன்ஸ்குயரிலிருந்து தண்டையார்ப்பேட்டைக்குச் சென்றது. மற்றொரு ஊர்வலம் ஏவி. எம். ஸ்டுடியோவிலிருந்து புறப்பட்டு வடபழனி சிங்கார வேலர் திடலை அடைந்தது.

சிங்கார வேலர் திடலில் நடந்த கூட்டத்தில் எஸ். ராமசாமி, எம். பி. சீனிவாசன், சி.ஏ. பாலன், நிமாய் [illegible] முதலியவர்கள் [illegible]னர்.

துறைமுக எ. ஐ. டி.யூ.சி சங்கங்களின் சார்பில நடந்த ஊர்வலம் துறைமுகபிரதான வாயிலிலிருந்து கிளம்பி தண்டையார்ப் பேட்டையை வந்தடைந்தது.

எ. ஐ. டி. யூ. சி தமிழ்நாடு கிளை பொதுச் செயலாளர் கே. எம். சுந்தரம் துறைமுகத் தொழிலாளர் சங்கத் தலைவர் கே. பெரய்யா செயலாளர்கள் எஸ். தங்கசாமி, முதலியவர்கள் ஊர்வலத்துக்குத் தலைமை வகித்தனர்.

ஊர்வலத்தில் அலங்கார வண்டிகளும் பங்கு கொண்டன.

பின்னர் தண்டையார்ப் பேட்டை மணிக்கூண்டு ஜீவா சிலை அருகில் உள்ள திடலில் பொதுக்கூட்டம் நடந்தது: இக்கூட்டத்தில் ஏ. எஸ். கே., எஸ். இ. கிருஷ்ணன், கோவிந்தசா[illegible] பக்த வத்சலு, [illegible]ந்தரம், பி. கருப்பண்ணன், மாணவர் தலைவர் க. மாணிக்கம் ஆகியோர் பேசினர்.

பொதுக் கூட்டத்தில் அலங்கார வண்டிகளுக்குப் பரிசளிக்கப்பட்டது.

எச். எம். எஸ்., ஐ. என். டி. யூ. சி. ஆகியவையும் தனித் தனியே ஊர்வலங்களை நடத்தின.

மே தினம் கொண்டாட தி.மு.க.வுக்கு தகுதியில்லை: குசேலர் பேச்சு

சென்னை, மே 2—ஆயிரக் கணக்கான தொழிலாளர்களை வேலை யிழக்கச்செய்து பட்டினி போட்டுள்ள தி. மு. க. அரசுக்கு மே தின விழாவைக் கொண்டாடத் தகுதியில்லை என்று உழைக்கும் மக்கள் மாமன்றத்தின் தலைவரான குசேலர் கூறினர்.

நாடு சுதந்திரம்பெற்று 25 ஆண்டுகள் ஆகியும் மே தின விழாவுக்கு மத்திய அரசு விடுமுறை விடாததை குசேலர் கண்டித்தார்.

சி. ஐ. டி. யூ. உழைக்கும் மக்கள் மாமன்றம் ஆகியவற்றின் சார்பில் நேற்று சென்னை கண்ணப்பர் திடலில் மேதின விழா பொதுக்கூட்டம் நடந்தது.

முன்னதாக நேப்பியர் பூங்காவிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. அதில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

பொதுக் கூட்டத்திற்கு முன்னாள் மேயர் கிருஷ்ண மூர்த்தி தலைமை வகித்தார்.

தொழிற் சங்கத் தலைவர்கள் ஜானகிராமன், அண்ணா தி. மு. க.வைச் சேர்ந்த மோகனரங்கம், ரிசர்வ் பாங்கி வரதராசன், சிம்சன் தொழிற்சங்கப் பொதுச் செயலாளர் ராஜகோபால், சி. ஐ. டி. யு. வைச் சேர்ந்த மைதிலி சிவராமன், இந்திய மாணவர் சம்மேளனத்தைச் சேர்ந்த பாலதண்டாயுதபாணி, பெங்களூர். எச். ஏ. எல். தொழிலாளர் தலைவர் மகாதேவன், வி. பி. சிந்தன் ஆகியோரும் பேசினர்.

ஒரே விழா

மைதிலி சிவராமன் பேசுகையில், இது தொழிலாளர்களின் தனித்திருவிழா வென்றும், இதில் முதலாளிகள் நுழைய அனுமதிக்கமாட்டோம் என்றுங்கூறினர்: இனிமேல் பலகட்சிகளும் தனித்தனியாக இந்த விழா நடத்தாமல் ஒரே விழாவாக நடத்த தொழிலாளர்கள் உறுதி எடுக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பெங்களூர் மகாதேவன் பேசுகையில், இப்போது நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு என்று கூறப்படுகிறது என்றும், இதனால் ஆளுங்கட்சி யூனியன்தான் நிர்வாகத்தில் பங்குபெறமுடியும் மென்றும், இது ஏமாற்றுப் பேச்சு என்றும் குறிப்பிட்டார்.

ஜானகிராமன் பேசுகையில் 92 ஆயிரம் மின்சார வாரிய தொழிலாளர்களில் 50 ஆயிரம் பேர் மூன்றரை ரூபாய் தினக் கூலியில் வேலை செய்கிறார்கள் என்று கூறினார்.

சிந்தன் பேச்சு

பிறகு சிந்தன் பேசினர். அவர் கூறியதாவது:—

இன்று மின் வெட்டால் தொழிலாளர்களுக்கு வாரத்தில் இரண்டுநாள் மூன்றுநாள் வேலைதான் தரப்படுகிறது. பல சிறிய தொழிற்சாலைகளில் லே ஆப் சம்பளம் கூட தரப்படுவதில்லை. இந்த மின்சாரத் தட்டுப்பாட்டுக்கு நாம் பொறுப்பல்ல, ஆட்சி செய்பவர்களின் திறமைக் குறைவே இதற்குக் காரணமாகும்.

இன்றைக்கு விலைவாசி உயர்வால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நாம் போராடிப் பெறும் சம்பள உயர்வு—போனஸ் போன்றவற்றை, விலைவாசியை உயர்த்துவதன் மூலம் நம்மிடமிருந்து மீண்டும் பிடுங்கிக்கொள்கிறார்கள்.

நீதிபதியும் தொழிலாளியும்

சுப்ரீம் கோர்ட்டில் ஒரு நீதிபதிக்கு சீனியாரிடி பார்க்காமல பதவி உயர்வு கொடுக்கப்பட்டதற்கு நாடே அமளிப்படுகிறது.

ஆனல் இப்படி ஒரு தொழிலாளி பாதிக்கப்பட்டால் யார் கவலைப் படுகிறார்கள்!

இன்னும் எத்தனை நாளைக்கு நாம் பஞ்சப்படிக்கும்—போனசுக்கும் போராடிக் கொண்டிருப்பது? நாம் இந்த உலகத்துக்குச் சொந்தக்காரர்கள். ஆகையால் இதை ஆளும் உரிமை நம்மிடம் வந்தால்தான் நமக்கு நிரந்தரமான விமோசனம் கிடைக்கும். இதற்கான போராட்டத்துக்கு நீங்கள் எல்லாம் தயாராக இருக்கவேண்டும்.

இவ்வாறு சிந்தன் கூறினர்.

குசேலர் பேச்சு

குசேலர் பேசியதாவது:—

இன்றைக்கு எல்லோரும் மே விழா கொண்டாடுகிறார்கள். பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களின் நிர்ப்பந்தம் காரணமாகவே அவர்கள் எல்லாம் இதைக்கொண்டாடுகிறார்கள்.

இங்கு ஏழைத் தொழிலாளிகள் தரும் 4 அணா 8 அணா பெற்றுக்கொண்டு மே விழா நடத்துகிறோம். ஆனால் அவர்கள் முதலாளிகளின் ஆதரவோடுதான் விழா கொண்டாடுகிறார்கள். அவர்களின் ஊர்வலத்துக்கு முதலாளிகள் லாரியும் டிரக்கும் கொடுத்து ஊர்வலம் நடத்தப்படுகிறது.

கருணாநிதி ஆட்சியில் தமிழர்களின் நலன் காக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் இன்று அடிசனிலும், விம்கோவிலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் நடுத்தெருவில் நிற்கின்றனர்.

கடந்த 7 மாத காலமாக 1500 தொழிலாளர்கள் விம்கோவில் போராடி வருகிறார்கள். மராட்டியத்திலும், கல்கத்தாவிலும் தரப்படுவது போல் எங்களுக்கும் கொடு என்று விம்கோ தொழிலாளர்கள் கேட்கிறார்கள். தமிழர்களின் நலனைக் கவனிக்கும் கருணாநிதியால் இதை வாங்கித் தரமுடியவில்லை.

மானப் பிரச்சினை எது?

கச்சத் தீவு என்ற ஒரு பாறை. அது குறித்து இலங்கைக்கும் — இந்தியாவுக்கும் சர்ச்சை. பிரதமர் இந்திரா காந்தி அதை, தென்னாட்டுப் பத்திரிகைகள்தான் பெரிது படுத்துகின்றன என்றும், வடநாட்டினர் இதைப் பொருட்படுத்த வில்லை என்றும் கூறினார். அதற்கு கருணாநிதி, கச்சத்தீவு தமிழர்களின் மானப் பிரச்சினை என்றும், உணர்ச்சிப் பிரச்சினை என்றும் கூறுகிறார். அந்தக் கருணாநிதிக்கு, இங்குள்ள தமிழர்களின்—தொழிலாளர்களின் பிரச்சினை மானப் பிரச்சினையாகத் தெரியவில்லை.

இவர்கள் மே தின விழா கொண்டாட என்ன தகுதி இருக்கிறது?

விடுமுறை இல்லையே

இந்திரா காங்கிரஸ் கட்சியினர் கூட இப்போது மேவிழா நடத்துகிறார்கள். சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகள் முடிந்தும், மே விழாவுக்கு விடுமுறை கூட விடாத காங்கிரஸ் கட்சியினர் மே தின விழாவில் கலந்து கொள்ளுகிறார்கள்.

இவ்வாறு குசேலர் பேசினர்.

சென்னையில் தடை உத்தரவு

சென்னை, மே 2—சென்னையில் சிந்தாதிரிப்பேட்டை, திருவல்லிக்கேணி, அண்ணா சாலை, ராயப்பேட்டை எழும்பூர் போலீஸ் ஸ்டேஷன் பகுதிகளில், நகர போலீஸ் சட்டம் 41-வது பிரிவின் கீழ் தடையுத்தரவு செவ்வாய்க்கிழமை காலை 6 மணியிலிருந்து 10 நாட்களுக்கு அமுலாக்கப்படுகிறது.

அடிசன் கம்பெனி டூல்ஸ் பிரிவு தொழிலாளர் பூசல் காரணமாக இந்த தடை உத்தரவு போடப்பட்டது.

விமான நிலைய பாதுகாப்பு: புதிய ஏற்பாடு

புதுடில்லி, மே. 2—டெல்லியிலுள்ள பாலம் விமான நிலையத்தின் பாதுகாப்புப் பணியை மத்திய தொழில் பாதுகாப்புப் படைப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

விரைவில் சென்னை பம்பாய், [illegible]கத்தா ஆகிய விமான நிலையங்களிலும் பாதுகாப்புப் பணியை இந்த படைப் பிரிவினர் மேற்கொள்வார்கள் என்று தெரிகிறது.

மத்திய அரசுக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்களில் பாதுகாப்புப் பணிகளை கவனிப்பதற்காக மத்திய தொழில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. இப்போது, விமான நிலையப் பாதுகாப்பைக் கவனிப்பதற்காக, இந்தப் படையில் ஒரு புது பிரிவு ஏற்படுத்தப்படும் என்று தெரிகிறது.

விமானங்கள் நிற்கும் பகுதிக்குள். அதிகாரபூர்வமற்ற வேறு நபர்கள் செல்லாமல் கண்காணிக்கும் பணியை இவர்கள்மேற்கொள்வார்கள்.

மற்றபடி, விமான நிலையங்களின் சட்டம், ஒழுங்கு பிரச்னைகளை போலீசாரும், சம்பந்தப்பட்ட இதர ஊழியர்களும் வழக்கம் போல கவனித்து வருவர்.

விவசாயப் பல்கலைக் கழக அபிவிருத்தி திட்டம்

சென்னை, மே. 2—தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழக அபிவிருத்திக்காக நீண்டகால திட்டமொன்றை, அதன் துணை வேந்தர் ஜி. ரங்கசாமி தயாரித்திருக்கிறார்.

5-வது திட்டக்காலத்தில் ரூ1960லட்சமும். 6-வதுதிட்ட காலத்தில் ரூ. 2100 லட்சமும் முதலீடு செய்ய இத் திட்டம் சிபாரிசு செய்கிறது.

ஒரு மீன்வளக் கல்லூரி, ஒரு விவசாய எஞ்சினீயரிங் கல்லூரி, ஒரு வ[illegible]யல் கல்லூரி, (அதாவதுமற்றொரு மிருக வைத்தியக் கல்லூரி) மூன்றாவது விவசாய கல்லூரி) ஒரு கிராமப்புற குடும்ப விஞ்ஞானக் கல்லூரி, ஒரு விவசாய பாலி[illegible]க்னிக் ஆகியவற்றை ஏற்படுத்துவது இத் திட்டத்தின் கீழுள்ள முக்கிய [illegible] பணிகளாகும்.

சென்னை ஓட்டலில் புதிய பகுதி திறப்பு

சென்னை, மே. 2—சென்னை நகரில் உள்ள கன்னிமாரா ஓட்டலில் வெளிநாட்டவர்களுக்கும் மேலும் பல நவீன வசதிகள் செய்யப்பட்டு இருப்பதாக அதன் நிர்வாக அதிகாரி பாலகிருஷ்ணன் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

"கோலம் காப்பி ஷாப்" என்ற புதிய பகுதி நேற்று திறக்கப்பட்டது. நீச்சல் குளம் கட்டி முடிக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

சோழர் கால நினைவை ஊட்டும் வகையில் "சோழன் பார்" என்றதும் பில் சோழர் கால சிற்பங்களை வைத்து பண்டைக்கால நினைவை வருபவர்களுக்கு ஊட்டும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்றும் நிருபர்களுக்கு காட்டினர்.

தென் ரெயில்வே புதிய ஜெனரல் மானேஜர்

புதுடெல்லி, மே. 2—ரெயில்வே போர்டில் திட்டப்பணி இயக்குனராக உள்ள வி. ராமனுதன் தெற்கத்திய ரெயில்வேயின் ஜெனரல் மானேஜராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்போது ஜெனரல் மானேஜராக இருக்கும் கே. என். சென்னபஸப்பா, மே 6-ந் தேதியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

ஜூனியர் சேம்பர்ஸ் தலைவருக்கு பாராட்டு

சென்னை, மே. 2—ஜூனியர் சேம்பரின் அகில உலக தலைவர் ராய் பனர்சி இந்தியா வந்துள்ளார்.

பல நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு சென்னை வந்துள்ள அவரை கௌரவிக்கும் வகையில் நேற்றிரவு கன்னிமாரா ஓட்டலில் ஒரு விருந்துபசார வரவேற்பு விழா நடந்தது.

ஜூனியர் சேம்பரின் சென்னை தலைவர் துஷார் எஸ். மேத்தா வரவேற்றுப் பேசினர்.

ராய் பனர்சி பேசுகையில் ஜூனியர் சேம்பர்ஸ் செய்யும் செயல முறை திட்டப்பணிகளை விவரித்தார்.

செயலாளர் விஷ்வம்பர் கே. நிசானி நன்றி கூறினர். விழாவில் அனைத்திந்திய தலைவர் ரகுநாதனும் கலந்து கொண்டார். மதுமத்தாவின் இசை நிகழ்ச்சியுடன் விழா முடிவுற்றது.

விழாவில் மங்கலபுரம் குடும்ப நலத்திட்ட அலுவலகத்துக்கும், தொழுநோயாளிகள் விடுதிக்கும் ரூபாய் 1000 நன்கொடை அளிக்கப்பட்டது.

இடிக்கி தொழிலாளருக்கு போனஸ்

திருவனந்தபுரம், மே. 2—இடிக்கி நீர்—மின்சாரத் திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 1972—73 ஆண்டுக்கு 20 சத விகித போனஸ் தருமாறு கேரள அரசு காண்டிராக்டர்களான இந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிக்கு உத்தரவிட்டிருக்கிறது.

இங்கு 4 600 பேர் பணிபுரிகின்றனர்.

இந்த முடிவால் அடுத்த திட்டத்தை முடிக்க வேண்டும் என்ற குறிக்கோள் நிறைவேறும் என்று நம்புவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இடிக்கி திட்ட பரிசீலனைக் குழு மே 8-ம்தேதிகூடுகிறது. மத்திய அமைச்சர் கே. எல். ராவ் இதில் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நியூயார்க் பருத்தி மார்க்கெட்

நியூயார்க், மே. 27—

ஆரம்ப விலை	51.25
முடிவு விலை	51•20

சுயநல சக்திகளை எதிர்த்துப் போராட இந்திரா கோரிக்கை

கான்பூர், மே 2—"சமூக, பொருளாதாரப் [illegible]யைத் தடுக்க முயற்சிக்கும் சுயநல சக்திகளை எதிர்த்துப் போராட மக்கள் ஒன்று சேர வேண்டும்" என்று பிரதமர் இந்திரா காந்தி கான்பூரில் மே தின விழாக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கான்பூரில் சுமார் 1 லட்சம் மக்கள் அடங்கிய பொது கூட்டத்தில் பிரதமர் இந்திரா காந்தி பேசினர்.

"ஏட்டிக்கு மாறுபவர்களை எதிர்ப்பவர்கள் நாடு சோஷலிசத்தை நோக்கி முன்னேறுவதைத் தடுக்க திட்டமிட்டுள்ளனர். பாட்டாளிவர்க்கத்தினர் உட்பட எல்லா முற்போக்கு சக்திகளும் சேர்ந்து அவர்களுடைய இத்திட்டத்தை முறியடிக்க வேண்டும்" என்று இந்திரா காந்தி கூறினர்.

பிரதமர் இந்திரா பேசுகையில் மேலும் கூறியதாவது:—

இச்சக்திகள் தவறான பிரச்சாரத்தின்மூலமும், அரசுமீது பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதன்மூலமும் மக்களைத் தவறான திசையில் திருப்பிவிடப் பார்க்கிறார்கள். இது நாட்டின் எதிரிகளுக்குத்தான் உதவுகிறது. வெளிநாடுகளில் இந்தியா மீதுள்ள மதிப்பைக் கெடுக்கிறது.

தடுத்து நிறுத்த முடியாது

நாடு சோஷலிசபாதையை நோக்கிச் செல்வதை எந்தக் கட்சியாலும், எந்தக் கோஷ்டியாலும் முதலாளிகளாலும் தடுத்து நிறுத்த முடியாது.

நாட்டை நான் கம்யூனிசத்தை நோக்கி இட்டுச்செல்வதாகக் குற்றம் சாட்டுகின்றனர். ஆனல் இவ்விதம் பொய்க் குற்றச் சாட்டுகளை சுமத்துபவர்களுக்கு கம்யூனிசம் என்றால் என்ன? சோஷலிசம் என்றால் என்ன என்று தெரியாது.

முதலாளிகளுக்காகப் பரிந்து பேசி, நாட்டில் குறுகிய மனப்பான்மையையும், பிரிவினை வாதத்தையும் பரப்ப முற்பட்டுள்ள ஜனசங்கம்-மற்றும் சில கட்சிகள் குறித்து மக்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

இவ்விதப் போக்குகள்நாட்டுக்குப் பாதகமானவை. பாட்டாளிவர்க்கத்திலர் தங்களுடைய முழுபலத்தைக் காட்டி இவற்றை எதிர்க்க வேண்டும்.

தொழிலாளர் கடமை

தொழிலாளருக்கு சமூக அல்லது பொருளாதார அநீதி ஏற்படாதபடி அரசு பார்த்துக்கொள்ளும். அதே நேரத்தில் உற்பத்தியைப் பெருக்கி அரசுடன் ஒத்துழைப்பது தொழிலாளரின் கடமையாகும்.

வறுமை ஒழிப்புப் போரில் தொழிலாளர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்றும் இந்திரா காந்தி கேட்டுக் கொண்டார்.

கருணாநிதி பேச்சு

1-ம் பக்கத் தொடர்ச்சி

செயல்படுத்துவது தி மு கழகம்.

ஓட்டுக்காக இதைச் செய்கி[illegible] என்கிறார்கள். ஆ[illegible]. ஓட்டு வாங்கி மறுபடியும் ஆட்சிக்கு வந்தால்தான் இது போன்ற சமதர்ம திட்டங்களைச் செய்யமுடியும் சொன்னதைச் செல்வதில் தவறு என்ன?

நேற்று முன்தினம் அண்டை மாநில கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் கழகங்களுக்கும் என்ன தகராறு என்று கேட்டார். எங்களுக்கு தெரியவில்லை என்றேன். அவருக்கும் தெரியவில்லை என்றார். விவசாய கிளர்ச்சி காரணமா என்று கேட்டார்.

விவசாய வருமான வரிச் சட்டம் கொண்டு வரப்பட்ட போது கம்யூனிஸ்ட் கட்சியினர் சட்டசபையில் ஆதரித்தனர். ஆனல் பிறகு விவசாயிகள் 15 கோரிக்கைகளை வைத்துப் போராட்டம் நடத்தியபோது விவசாய வருமான வரியைக் குறைக்கவேண்டும் என்ற கோரிக்கையை ஆதரித்தனர் என்று சொன்னேன்.

அப்படியா? விவசாய வருமான வரியைக் குறைக்க எங்கள் கட்சியினரா கேட்டனர் என்று அந்தத் தலைவர் கேட்டார்.

ஆம் என்றேன். அவர் ஆச்சரியப்பட்டு மூக்கின்மேல் விரலை வைத்தார்.

தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டுள்ளது.

திண்டுக்கல்லில்

போர்தாக்குறையாக நரி வலம் போனால் என்ன இடம்போனால் என்ன? என்பதுபோல இரு கம்யூனிஸ்டுக் கட்சிகளும் ஒரே நிலைக்கு (திண்டுக்கல்லில்) வந்திருக்கிறார்கள்.

அந்த இரு கட்சியில் இருக்கும் தொண்டர்கள், தியாகம் செய்தவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திமு கழக அரசு விவசாயத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனைகளை ரத்தப் புரட்சி இல்லாமல் சொந்தமாக்கியது [illegible]?

கம்யூனி[illegible] கட்சித் தொண்டர்களைக் கேட்கிறேன். ஒரு லட்சத்து 80 ஆயிரம் விவசாய குடும்பங்களுக்கு குடியிருப்பு மனைகளை சாசனம்செய்து தந்தது கம்யூனிஸ்ட் கட்சி கொள்கைக்கு விரோதமா?

உங்கள் தலைவர்களைக் கேட்கவேண்டாமா?

குத்தகை நிலங்களை உழுபவனுக்கே சொந்தமாக்குவது கம்யூனிஸ்ட் கொள்கைக்கு விரோத[illegible]?

நாள் முழுவதும் தகிக்கும் [illegible] வெயிலில் 'காலில் சாக்கை கட்டிக்கொண்டு ரோடு போடும் தொழிலாளர் பாடு பட்டனர்.

மனமுருகிய ஜீவா பாடினர், "காலுக்கு செருப்பும் இல்லை, கால் வயிற்றுக் கஞ்சி இல்லை" என்று.

ஜீவா இப்படிச் சொல்லி கண்ணீர் விட்டதை நினைத்து காலுக்கு சாக்கு [illegible] இந்தத் [illegible] கொடுத்தோமே, கம்யூனிஸ்ட் தோழர்களே! இது கம்யூனிச விரோதமா?

உங்கள் தலைவர்களைக் கேளுங்கள். இதுவே கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கு நான் விடுக்கும் மே தினச் செய்தி.

இவ்வாறு கருணாநிதி கூறினர்.

இன்றையசினிமா

சென்னை

கபாலி	பெத்தமனம் பித்து
காமதேனு	வசந்தமாளிகை
சரஸ்	நீதி
நியூ எலிபின்ஸ்டன்	மிஸ்மேரி
நேஷனல் டாக்கீஸ்	திருடாதே
ராம்	வாயாடி

தாம்பரம்

எம். ஆர். தியேட்டர்	வாயாடி
ஸ்ரீ சித்ரா	காரைக்காலம்மையார்
நேஷனல்	ராஜராஜசோழன்

குரோம்பேட்டை

வெற்றி	அம்மன் அருள்

வில்லிவாக்கம்

ராயல்	வாயாடி

மாநகராட்சி கமிஷனர் வீட்டுமுன் மந்திரி கிளர்ச்சி

கல்கத்தா, மே. 2—மேற்கு வங்க சுகாதார மந்திரி அஜித் குமார் பாஞ்சா போட்ட ஓர் உத்திரவை கல்கத்தா மாநகராட்சி கமிஷனர் ஆர். பி. காங்கூலி அமுல்படுத்தவில்லை.

இதை எதிர்த்து மாநகராட்சி கமிஷனர் வீட்டின் முன்பாக மந்திரி ஒரு நூதன கிளர்ச்சியை நடத்தினர்.

மந்திரி பாஞ்சா பல குப்பை லாரிகளை வரவழைத்தார். குப்பை லாரிகள் ஊர்வலமாகக் கிளம்பின. இந்த ஊர்வலத்துக்கு மந்திரியே தலைமை வகித்தார். மந்திரி [illegible] பாஞ்சா தலைமையில் சென்ற இக்குப்பை லாரிகள் மாநகராட்சி கமிஷனர் காங்கூலி வீட்டின் முன்பாகப் போய் நின்றன.

பின்னர் மந்திரி பாஞ்சா, மாநகராட்சி கமிஷனருடன் பேச்சு நடத்தினர்.

நகரில் சில பகுதிகளில்தேங்கிக் கிடக்கும் குப்பைகளை ஏழு நாட்களில் அகற்றுவதாக மாநகராட்சி கமிஷனர் வாக்களித்த பிறகே மந்திரி பாஞ்சா அங்கிருந்து குப்பை லாரிகளைத் தன்னுடன் கூட்டி[illegible]ச் சென்றார்.

மந்திரி போட்ட உத்திரவை மாநகராட்சி கமிஷனர் அமுல் படுத்தாததால் நகரின் சில பகுதிகளில் குப்பைகள் குவிந்ததைத் தொடர்ந்தே மந்திரி இந்த நூதன கிளர்ச்சியை நடத்தினர்.

மந்திரியின் இக்கிளர்ச்சியைத் தொடர்ந்து மாநகராட்சி கமிஷனர் ராஜிநாமா செய்யப் போவதாக வதந்திகள் கிளம்பின. இந்த வதந்திகளை கமிஷனர் காங்கூலி மறுத்துள்ளார்.

மேற்படி சம்பவம் [illegible] 29-ந்தேதி நடந்தது.

சென்னை மார்க்கெட்

சென்னை, மே. 2—

தங்கம்

24 காரட்) சுத்த தங்கம் 10 கிராம் ரூ. 336 00
(22 காரட்) சில்லரை 1 கிராம் ரூ. 32 00
(14 காரட்) சில்லரை கிராம் ரூ. 21 50

வெள்ளி

பார் வெள்ளி (1 கி. கி.) ரூ. 650 00
உள்நூர் வெள்ளி ரூ. 640 00
வெள்ளி 10 கிராம் ரூ. 6 60

மணிலாப்பயறு

மாரிகால பட்டாணி 80 கி. கி. ரூ. 267 00

மணிலா எண்ணெய்

மொத்த விலை ரூ. 660 00
இல்லரை விலை ரூ. 7 00

விளக்கெண்ணெய்

(100 கி. கி.) சென்னை கிடங்கு டெலிவரி திருப்பத்தூர் மொத்த விலை ரூ. 640 00

தேங்காய் எண்ணெய்

(16 கி.கி.) டின் எம். எஸ். மார்க் ரூ. 131 00 முதல் ரூ. 132 00

நல்லெண்ணெய்

17 கி. கொண்ட டின் 1-க்கு (அக்மார்க் குருபரன் மார்க்) ரூ. 118 00 விற்பனை வரி தனி
இல்லரை கிலோ 1-க்கு) ரூ. 7 50

கடலைப்பிண்ணாக்கு

கி.கி. கொண்ட மூட்டைக்கு 70 எக்ஸ்பெல்லர் ரூ. 90 00

சர்க்கரை

பகிரங்க மார்க்கெட் விலை 100 கி.கி. ரூ. 352 00 முதல் ரூ. 354 00

தொழிற் சங்கங்களில் அரசியல் தலைமை

"வாபஸ்பெற நாங்கள் தயார்? நீங்கள் தயாரா?" கருணாநிதி கேள்வி

சென்னை, மே 2—"தொழிற் சங்கங்களில் இருந்து அரசியல் தலைவர்கள் தலைமைப் பதவிகளை வாபஸ்பெற முன்வந்தால் தி. மு. கழகமும் அதுபோல முதலில் செய்யத் தயார்" என்று திருவல்லிக் கேணி கடற்கரையில் நடந்த மே தின பொதுக் கூட்டத்தில் முதலமைச்சர் கருணாநிதி அறிவித்தார்.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்கவேண்டும் என்றும் முதல்வர் கருணாநிதி மீண்டும் வற்புறுத்தினர்.

மே தின விழாக் கூட்டத்தில் இதுபற்றி முதலமைச்சர் பேசியதாவது:—

இந்த மே தினத்திலாவது தி. மு. கழகம் என்பதை மறந்து கம்யூனிஸ்ட் என்பதை மறந்து காங்கிரஸ் என்பதை மறந்து சோஷலிஸ்ட் என்பதை மறந்து எல்லா கட்சித் தொழிலாளர்களும் கட்சிகளை மறந்து கூட வேண்டும்.

கடமையை நினைவுபடுத்தி உரிமையைப் பெற ஒற்றுமையாக இருந்து எப்படிப் பெறுவது என்பதை நெஞ்சில்பதிய வைக்க இந்த ஒரு நாளைப் பயன படுத்தக் கூடாதா?

இதைப் பற்றிக் கவலைப்படும் நீயே இந்த முயற்சியில் ஏன் ஈடுபடக்கூடாது என்று கேட்கலாம். அதற்கு என் பதில் இதுதான்.

வெளியார் தலையீடு

நீண்ட நெடுநாட்களாக தி மு. கழகம் சொல்லி வருகிறது. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம். அதில் வெளியார் தலையீடு கூடாது.

இதை ஏற்றால் தொழிலாளர் நலன்—தொழிலாளர் இன உணர்ச்சி ஏற்பட முடியும். ஆனால் அப்படி நடக்காமல் போய்விட்டது.

அரசியல் கட்சிகள் தொழிற் சங்கங்களை நடத்தும் சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

இதை நான் சொல்லும் போது உங்கள் சங்கதி என்ன என்று திருப்பிக் கேட்கக் கூடும்.

தி. மு. கழகத்தின் சார்பில் தொழிற்சங்கம் எப்போது துவக்கப்பட்டது?

தொழிற்சங்கப் போராட்டங்களில் தங்கு தடையில்லாமல் நாங்கள் கலந்துகொண்டோம். ஆனால் தொழிற்சங்கம் நடத்த ஆசைபடவில்லை.

கட்சிச் சங்கங்கள் வேண்டாம் என்று சொல்லிச் சொல்லிப் பார்த்தோம் அது எடுபடவில்லை; எங்களை ஏளனம் செய்தார்கள்.

பிறகு வேறு வழியில்லாமல் தொழிலாளர்களை நியாயவழியில் நடத்தி — கடமையை உணர்த்தி உரிமையைப் பெற்றுத் தரும் பொறுப்பைப் பார்த்து மற்றவர்கள் நாங்கள் சொல்வதற்கு செவி கொடுக்காமல் போனதால் தி.மு.கழக சார்பில் 3 ஆண்டுகட்கு முன்பு தி மு கழக தொழிற்சங்கப் பேரவை உதயம் ஆயிற்று.

தி. மு. க. தயார்

தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் நாளைக்கே தங்கள் அரசியல் தலைமையை தொழிற் சங்கங்களிலிருந்து திருப்பப் பெறுவதாக அறிவித்தால் தி மு கழகம் முதலில் அதைச் செய்ய தயாராக இருக்கிறது.

தி. மு. கழக அரசு தொழிலாளர் நல அரசு என்று கூறுகிறீர்கள். தொழிலாளர்களுக்கு நாங்கள் எதைச் செய்யவில்லை? கூற முடியுமா?

எந்தத் தொழிற் சங்கமும் இருந்தாலும் போராட்டங்கள் வன்முறைக்குப் போகாமல் பேசித் தீர்த்து வைத்து தொழிலாளர்களுக்காக பாடுபட்டு வருவது திமுக அரசு தவிர வேறு இல்லை.

இவ்வாறு முதல்வர் கருணாநிதி பேசினர்.

கள்ளு குடித்து 4 பேர் மரணம்

தஞ்சாவூர், மே. 2— தஞ்சை மாவட்டம் தரங்கம்பாடி அருகே மாத்தூர் கிராமத்தில் கள்ளு குடித்து நான்கு பேர் மரணடைந்தனர் என்று இங்கு தகவல் கிடைத்துள்ளது.

மாத்தூர் கிராமத்தில் மாரியம்மன் கோயில் விழாவுக்காக வந்திருந்த முத்தன் (35 வயது), ராமலிங்கம் (25 வயது), மணி (25 வயது) சின்னதுரை (20 வயது) செல்லராஜ் ஆகிய 5 பேரும் கள்ளு குடித்தனர். சிறிது நேரத்தில் 5 பேரும் மயக்கமுற்றனர் என்றும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகையில் முதல் நான்கு பேரும் மரணமடைந்தனர் என்றும் கூறப்படுகிறது. செல்வராஜ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். போலீசார் இது பற்றி புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

இந்தியாவில் பெட்ரோலிய உற்பத்தி

புதுடெல்லி, மே 2—நடப்பு ஆண்டில் இந்தியாவுக்கு மொத்தம் 2 கோடியே 41 லட்சம் டன் பெட்ரோலியப் பொருட்கள் தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் 1 கோடியே 97 லட்சம் டன் பெட்ரோலியப் பொருட்கள் உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும்; மீதமுள்ள 44 லட்சம் டன் பெட்ரோலியத்தை இறக்குமதி மூலம் சரிகட்ட வேண்டும்; மத்திய பெட்ரோலிய ரசாயனப் பொருள் துணையமைச்சர் தல்பீர் சிங் மாநிலங்களவையில் கேள்வியொன்றுக்கு எழுத்து மூலம் பதிலளிக்கையில் இதை தெரிவித்தார்.

மால்கோ அரசுடைமை விவகாரம்

சுப்பிரமணியம் அஞ்சுவது ஏன்? ப. உ. ச. கேள்வி

சென்னை, மே 2—மேட்டூர் அலுமினிய ஆலையை (மால்கோ) தமிழக அரசு அரசுடைமை ஆக்கினால் தமிழ்நாட்டில் புதிய தொழில்களைத் துவக்க தொழில் அதிபர்கள் அஞ்சுவார்கள் என்று மத்திய அமைச்சர் சுப்பிரமணியம் கூறுகிறார். அவருக்கு ஏன் இந்த அச்சம் என்று அமைச்சர் ப. உ. சண்முகம் கேட்டார்.

சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த மே தினப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினர்.

மால்கோ அலுமினிய தொழிற்சாலையை தமிழக அரசு ஏற்க உடனடியாக மத்திய அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று அமைச்சர் ப. உ. சண்முகம் கோரினர்.

கேலிசெய்தவர்கள்

கடற்கரைக் கூட்டத்தில் அமைச்சர் ப. உ. சண்முகம் பேசியதாவது:—

மேதின விழாவை தமிழகத்தில் திமு கழகம் அறிமுகம் செய்தபோது கிண்கில்-கேலி செய்தவர்கள் இன்று மேதின வாழ்த்து சொல்கிறார்கள்.

சோஷலிசம் பற்றி இன்று யார் யாரோ பேசுகிறார்கள். ஆச்சரியமாக இருக்கிறது. காமராஜர் கூட மேதின வாழ்த்து தெரிவித்து இருக்கிறார்.

ஆனால் நாட்டில் வருமான வரியை ஏமாற்றுகிறவர்களை சோஷலிசம் என்ற வார்த்தைக்கு உரிமை கொண்டாடும் கல்யாணசுந்தரம் போன்றவர்கள் ஆதரிப்பதை எங்கே போய்ச் சொல்வது?

கள்ளப்பணம் வாங்குகிறவர்களும், கறுப்புப் பணம் வாங்குகிறவர்களும் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு சோஷலிசவாதிகளாகக் காட்சி அளிக்கிறார்கள்.

துரோகியுடன் சேர போட்டி போடுகிறார்கள். போகவேண்டியவர்கள் போய் தி.மு.கழகம் தூய்மைப்பட்டு விட்டது.

நாம் சொன்ன கொள்கைகளை வேகமாக நிறைவேற்றி வருகிறோம். தேர்தல் அறிக்கையில் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறோம்.

பஸ் தொழிலாளர்களை 24 சதவிகித பங்குதாரர்களாக ஆக்கியது இந்தியாவிலேயே இல்லாத சட்டம்.

மற்றவர்கள் நம்மைப்பார்த்துக் காப்பி அடிக்கும் வகையில் நாம் தீவிரமாக இருக்கிறோம். இந்தியாவில் இப்படி செய்து இருக்கிறார்களா? கிடையாது. இப்படிப்பட்ட

4-ம் பக்கம் பார்க்க



ப. உ. சண்முகம் கேள்வி

2-ம் பக்கத் தொடர்ச்சி

சட்டத்தை நிறைவேற்ற நாம் அஞ்சவில்லை.

மால்கோ விவகாரம்

மால்கோ அலுமினியம் தொழிற்சாலை நிர்வாகத்தை நாம் ஏற்கசட்டம் கொண்டு வந்தோம். இதில் தவறு என்ன?

இதைப்பற்றி சி. சுப்பிரமணியம் சொல்லி இருப்பதைப் பார்த்து திடுக்கிட்டேன்.

மால்கோவை தமிழக அரசு ஏற்றால் தமிழ் நாட்டுக்கு தொழில அதிபர்கள் புதிய தொழில்களைத்துவக்க அச்சப்படுகிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்.

அச்சம் ஏன்?

தொழில் அதிபர்களுக்கு அச்சம் இருக்கிறதா? இல்லையே? இவருக்கு இருக்கிறது. சி. சுப்பிரமணியத்திற்குஇந்த அச்சம் ஏன் வந்தது?

மால்கோ தொழிற்சாலையில் தனியார் ஒருவர் போட்ட மூலதனம் ரூ. 33 லட்சம். தமிழக அரசு 130 லட்சம் போட்டுள்ளது. மத்திய அரசு 150 லட்சமும், இத்தாலிய அரசு 150 லட்சமும் முதலீடு செய்துள்ளன.

யாரிடம் அதன் நிர்வாகத்தை ஒப்படைக்கவேண்டும்?

அந்தத் தொழிற்சாலைக்கு மின்சாரத்தை யூனிட் அரை தம்பிடிவீதம் தருகிறோம். இதனால் தமிழக அரசுக்கு ஆண்டு தோறும் ரூ. 150 லட்சம் இழப்பு ஏற்படுகிறது. இந்த நிலையில் நிர்வாகம் யாரிடம் இருக்கவேண்டும்.

இத்தாலிய அரசிடம் இருக்க வேண்டும் என்று சொல்லும் அடிமைப் புத்தி எங்களுக்கு இல்லை.

150 லட்சம் போட்ட மத்திய அரசு ஏற்கவேண்டும். அல்லது 130 லட்சம் போட்டுள்ள மாநில அரசு ஏற்க வேண்டும். 33 லட்சம் போட்டுள்ள தனியார் ஏற்க இருக்க வேண்டும் என்பது நியாயம்.

நிர்வாகப் பொறுப்பை யார் ஏற்பது? நம்முடைய சட்டத்தின்படி மத்திய அரசு ஆமோதிப்பு தெரிவிப்பதோடு பாராட்டும் தந்து இருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யவில்லை.

தவறு என்ன?

ஆகவே, மால்கோ நிர்வாகத்தை தமிழக அரசு ஏற்க காலதாமதம் இல்லாமல் மத்திய அரசு ஆணை அனுப்ப வேண்டும். தமிழக சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவேண்டும். இது மக்கள் கோரிக்கை. தமிழக அரசு அதன் நிர்வாகத்தை ஏற்பதில் தவறு என்ன?

எங்களைப் பார்த்து சோஷலிசவாதிகளா என்று கேட்கிறார்கள். தஞ்சையில் விவசாய கூலிகளுக்கு கணபதியா பிள்ளை கமிஷனை அமைத்து அதை அப்படியே ஏற்று அமல்நடத்திய முதல்வர் சோஷலிசவாதி இல்லையா?

ஒவ்வொரு தொழிலுக்கும் இவ்வளவு கூலி இருக்கவேண்டும் என்பதைப்பற்றி குழு ஆராய்ந்து வருகிறது. அது வந்த பிறகு மகத்தானபுரட்சி ஏற்படும்.

இவ்வாறு ப. உ. சண்முகம் கூறினர்.

புலியைக் காக்க ரூ. 4 கோடி

புதுடெல்லி, மே. 2— நாட்டில் புலிகளைப் பாதுகாப்பதற்காக ரூ. 4 கோடி செலவில் ஆறு ஆண்டு திட்டத்தை இந்திய சர்க்கார் மேற்கொண்டுள்ளது.

புலித் தோல் விற்பனையைத் தடை செய்வதைப் பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை.

என். ஜி. ஓ. சங்கத்தில் முதல்வர் தலையீடா?: சுப. சீதாராமன் மறுப்பு

சென்னை, மே. 2— தமிழக முதல்வர் கருணாநிதியின் தூண்டுதலின்பேரில் தமிழ் நாடு என்.ஜி.ஓ. சங்கம் சட்ட திட்ட விதிகளைத் திருத்தியது என்றும், அதை தமிழ்நாடு என். ஜி. ஓ. சங்கப் பொதுக் குழு ஏற்கடித்தது என்றும் வெளியான செய்தியை தமிழ் நாடு என். ஜி. ஓ. சங்க அமைப்புச் செயலாளர் சுப. சீதாராமன் மறுத்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது—

தமிழ்நாடு என்.ஜி.ஓ. சங்கத்தின் மாநிலப் பொதுக்குழு வேலூரில் கூடவே இல்லை. அங்கு வட ஆற்காடு மாவட்டக் கிளையின் கூட்டம் நடைபெற்றதாகத் தெரிகிறது. அக்கூட்டத்தில் தமிழக முதல்வர் பற்றி யாரும் பேசவில்லை. அவர் யோசனையின் பேரில்தான் சங்க திட்டங்கள் திருத்தப்பட்டன என்றும் கூறப்படவில்லை.

மேலும் தமிழ்நாட்டில் மிக பெரும் பொறுப்பை வகிக்கின்ற தமிழ்நாடு முதல்வரின் மதிப்பைக் குறைத்துப் பேசும் அளவிற்கு என். ஜி. ஓ. வினர் அறிவு மழுக்கம் அடையவில்லை. தமிழக முதல்வர் தமிழ்நாடு என். ஜி. ஓ. சங்கம் மீதும் அதன் நிர்வாகிகள் மீதும் நல்லெண்ணம்கொண்டு அளப்பரிய நன்மைகள் புரிவதை பொறுக்க முடியாத சில பிளவு சக்திகளும், அரசியல் ஊடுருவல்காரர்களும் தமிழ் நாடு என். ஜி. ஓ. யூனியனுக்கும் தமிழக முதல்வருக்கிடையேயும் நல்லுறவை சீர் குலைக்க முயல்வதையே இத்தகைய புரட்டு வேலைகள் உறுதிப்படுத்துகின்றன.

முதல்வர் பற்றிப் பொய்ச் செய்தி வெளியிட்டுள்ள சில நாளிதழ்கள் மீது வழக்கு தொடரப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

"என்னைப் பழி வாங்கிவிட்டார்"

பிரதமர் மீது ராஜிநாமா செய்த சுப்ரீம் கோர்ட் நீதிபதி குற்றச்சாட்டு

புதுடெல்லி, மே. 2—சுப்ரீம் கோர்ட்டில் ஒரு தேர்தல் வழக்கில் பிரதமர் இந்திரா காந்திக்குப் பாதகமாக தீர்ப்பு அளித்ததால் இந்திரா காந்தி என்னைப் பழி வாங்கிவிட்டார் என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதி பதவியிலிருந்து ராஜிநாமா செய்த ஹெக்டே குற்றம் சாட்டியுள்ளார்.

தம்மையும் மற்றும் இரண்டு மூத்த நீதிபதிகளான கே. எம். ஷெலாத்தையும், ஏ. என். குரோவரையும் புறக்கணித்து ஏ. என். ரேயை பிரதம நீதிபதியாக நியமித்திருப்பதானது, நீதித் துறை சுதந்திரத்தை அழிப்பதற்காக நடக்கும் திட்டமிட்ட முயற்சியின் ஒரு பகுதியே என்று ஹெக்டே கூறினர்.

மூன்று மூத்த நீதிபதிகளைப் புறக்கணித்து ஏ. என். ரேயை சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதியாக நியமித்ததை ஆட்சேபித்து ராஜிநாமா செய்த மூன்று சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளில் ஹெக்டே ஒருவர்.

இவர் நேற்று நிருபர்கள் கூட்டத்தில் பேசுகையில் பிரதம மந்திரி இந்திரா காந்தி, உருக்கு அமைச்சர் மோகன் குமாரமங்கலம், சட்ட அமைச்சர் எச். ஆர். கோகலே, புதிய பிரதம நீதிபதி ஏ. என். ரே ஆகியோரை கடுமையாகத் தாக்கினர்.

இந்திரா மீது குற்றச்சாட்டு

இந்திராகாந்தியின் தேர்தல் வழக்கு குறித்த அப்பீலில் தாம் அளித்த தீர்ப்பால் பிரதம மந்திரி இந்திரா காந்தி எரிச்சலடைந்துள்ளார் என்று நினைக்க இடமிருப்பதாகவும் "எனக்கு எதிராக அவருடைய ஏஜண்டுகள் பிரசாரம் செய்வதில் சுறுசுறுப்பாயிருக்கிறார்கள் என்றும்" ஹெக்டே கூறினர்.

இந்த தேர்தல் அப்பீலை விசாரித்த பெஞ்சில் நீதிபதிகள் ஜகன்மோகன் ரெட்டி, கே. கே. மாத்யூ ஆகியோரும் இருந்தனர்.

ராஜ்நாராயண் தேர்தல் மனுவில் நிராகரிக்கப்பட்ட எல்லா விஷயங்களையும் விசாரிக்கும்படி அலகாபாத் ஹைகோர்ட்டுக்கு உத்தரவு பிறப்பிப்பதில் அவர்களும் தம்முடன் சேர்ந்துகொண்டதாகவும் ஹெக்டே ஒப்புக் கொண்டார்.

பெஞ்சின் அபிப்பிராயத்தை நான் அளித்தேன் என்பதால் இந்திரா காந்திக்கு என்னிடம் விரோதம் ஏற்பட்டு விட்டது. "இதற்கு முடிவான ஆதாரம் எதையும் என்னால் அளிக்க முடியாது. ஆனால் அவருக்கு எரிச்சல் ஏற்பட்டுவிட்டது என்று திடமாகக் கருதுகிறேன்" என்று ஹெக்டே கூறினர்.

மோகன் மீது குற்றச்சாட்டு

உருக்கு அமைச்சர் மோகன் குமாரமங்கலம் மீதும் ஹெக்டே குற்றம் சாட்டினர்.

"ஜனநாயகத்தை நான் மதம்போல நம்புபவன். ஆனால் மோகன் குமாரமங்கலமோ ஜனநாயகத்தைமூடி மறைப்பதற்காக பயன்படுத்துகிறார். ஜனநாயகத்தில் நான் நம்பிக்கை வைத்திருப்பது அவருக்குப்பிடிக்கவில்லை. நீதித்துறை சுதந்திரத்தில் அவருக்கு நம்பிக்கை இல்லை.

இப்போதைய அரசியல் சட்டத்துக்கு உலை வைப்பதே அவருடைய நோக்கம் என்பது தெளிவு. காங்கிரஸ் கட்சியில் அவர் சேர்ந்ததே, உள்ளுக்குள்இருந்து கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே" என்று ஹெக்டே கூறினர்.

பகடைக்காய்

"கோகலே (சட்ட அமைச்சர்)க்கு யோசனைகளோ, லட்சியங்களோ கிடையாது. நீதித்துறையின் சுதந்திரத்தை அழிப்பதற்காக முன்பு நீதிபதியாகவும் வழக்கறிஞராகவும் இருந்த கோகலே பகடைக்காயாக உபயோகப்படுத்தப்படுகிறார்.

"நீதி மன்றத்துக்கும், வக்கீல் தொழிலுக்கும் அவர் மிகவும் அபாயகரமானவர்" என்று ஹெக்டே கூறினர்.

ராஜிநாமா ஏன்?

சுப்ரீம் கோர்ட் நீதிபதியாகத் தொடர்ந்து பதவி வகிப்பதால் பயன் எதுவும் இல்லை என்று கருதியதால் தாம் ராஜிநாமா செய்ததாக ஹெக்டே கூறினர். தாம் போற்றிவந்த மதிப்புகளை

நீதிபதி நியமன விவகாரம்

பிரதமர் இந்திரா பதில்

கான்பூர், மே. 2—பதவி உயர்வில மற்றவர்களை புறக்கணிப்பதால் பயனடைந்தவர்கள் இப்பொழுது புதிய சுப்ரீம்கோர்ட் பிரதமநீதிபதி நியமனத்தில் 3 நீதிபதிகள் புறக்கணிக்கப்பட்டது பற்றி கூப்பாடு போடுவதாக பிரதமர் இந்திரா காந்தி நேற்று கூறினர்.

நேற்று மே தினக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அந்த நீதிபதிகள் புறக்கணிக்கப்பட்டதை அடுத்து எழுந்துள்ள சர்ச்சை பற்றி அவர் குறிப்பிட்டார். பிரதம நீதிபதியை நியமிப்பதில் சீனியாரிட்டியை மட்டும் ஒரு அளவுகோலாக கொள்ளக் கூடாது என சட்டகமிஷன் கூறியது. அதை அரசு ஒப்புக்கொண்டு முடிவு செய்தது என்று இந்திரா கூறினர்.

ஏழைகளுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்பதே அரசின் நோக்கம். இதுவரை இருந்துள்ள அமைப்பில் அது சாத்தியமில்லை என பிரதமர் கூறினர்.

ஜனநாயகத்துக்கு ஆபத்தா?

ஜனநாயகத்துக்கு ஆபத்து என்று கோஷமிடுகிறவர்களுக்கு ஜனநாயகம் என்பதன் பொருள்தெரியவில்லை. ஜனநாயகம் என்றால் தற்போதைய நிலை மாறுதல் இன்றி நீடிப்பதல்ல என்று இந்திரா சொன்னர்.

சில வகுப்புகள் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள எப்பொழுதும் விரும்புகின்றன; அவை பாதிக்கப்படும்போது அரசு ஜனநாயக விரோதமாக நடந்து கொள்வதாக குற்றஞ் சாட்டுகின்றன, அது பொய் என்றார் இந்திரா காந்தி.

சில மாறுதல்களைச் செய்ய முன்னர் அமெரிக்க ஜனதிபதி ரூஸ்வெல்ட் முயற்சித்தபோது கம்யூனிசத்தை நோக்கி நாட்டை கொண்டு செல்வதாக அவர் மீது பிரிவினர் குற்றஞ்சாட்டினர் என்று இந்திரா குறிப்பிட்டார்.

ஏழைகளுக்கு எவ்வாறு நீதி கிடைக்கமுடியும் என்பது பற்றி யோசிக்குமாறு சட்ட நிபுணர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

விட உத்தியோகத்தில்தான் நாட்டம் என்ற எண்ணத்தை தாம் பதவியில் நீடித்திருந்தால் ஏற்படுத்தியிருக்கும் என்றும் அவர் கூறினர்.

ஹெக்டே அரசியல் கட்சியில் சேரலாம்

சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி நியமனத்தை ஆட்சேபித்து சுப்ரீம்கோர்ட் நீதிபதி பதவியிலிருந்து ராஜிநாமா செய்துள்ள ஹெக்டே அரசியலில் கட்சி ஒன்றில் சேரக்கூடும் என்று தெரிகிறது.

இதுபற்றி அவரே நேற்று நிருபர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

"சமுதாயத்துக்கு எப்படிச் சிறப்பாக சேவை புரிவது என்பதற்குத் தாம் இன்னமும் திட்டம் வகுக்கவில்லை" என்று கூறிய ஹெக்டே, தாம் அரசியலில் பிரவேசிக்கக் கூடும் என்றார். "அவசியமானால் இதற்காக ஒரு அரசியல் கட்சியில் சேரத் தயங்கமாட்டேன்" என்றார் அவர்.

ஏர் இந்தியாவிடம் ரூ 35 லட்சம் வைரம் கொள்ளை

நியூயார்க், மே 2—நியூயார்க் நகரில் கென்னடி விமான நிலையத்தில் ஏர் இந்தியா கிடங்கில் துப்பாக்கி தரித்த 3 கொள்ளையர்கள் புகுந்து 5 லட்சம் டாலர் (சுமார் 35 லட்சம்) மதிப்புள்ள வைரங்களை கொள்ளையடித்துக்கொண்டு ஓடிவிட்டனர்.

இரவு சுமார் 10 மணிக்கு அவர்கள் கிடங்கில் புகுந்து இரும்பு பெட்டியை திறக்கு மாறு ஊழியர்களை மிரட்டியதாக துப்பறியும் போலீசார் ஹெர்பர்ட் ஜிக் கூறினர்.

"எங்களுக்கு வைரம் வேண்டும் உங்களிடம் அது வந்தது தெரியும்" என்று அவர்களில் ஒருவன் கூறினன்.

6 ஊழியர்களை கயிற்றால் கட்டிப்போட்டுவிட்டு அவர்கள் ஓடிவிட்டனர். ஒரு ஊழியர் கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு போலீசுக்கு போன் செய்தார்.

ஊழியர்களிடமிருந்து 238 டாலர்களையும் (ரூ. 1800) அவர்கள் பறித்துச் சென்றனர்.

அந்த வைரங்கள் இந்தியாவில் இருந்து அமெரிக்க வியாபாரிகளுக்கு கொண்டுவரப்பட்டன.

தமிழ்நாட்டில் கதைகளுக்கு பஞ்சமா?

காரைக்குடி நாராயணன்

தமிழனும் தமிழ்நாடும் கலையை வளர்ப்பதில் எவருக்கும் தாழ்ந்ததல்லே. அண்டை மொழிகளில் கால் காசுக்குப் பெருத கதைகளே பல ஆயிரம் கொடுத்து வாங்(கு)வதனைப் பார்ப்பதைவிட தமிழ்நாட்டில் உள்ள கதைகளை வாங்கி கதாசிரியர்கள் வயிற்றில் அடிக்காமல் வாழவைக்கலாம் என்கிறார் திரைப்படக் கதாசிரியர் காரைக்குடி நாராயணன்.

வாழ்க்கை என்பது ஒரு வியாபாரம் அனுபவங்கள் ஆதாரமான செலவுகள். அந்த வியாபாரத்தில் கலை ஒரு சந்தை. இங்கே எழுதுவோர், நடிப்போர், மற்றும் தொழில் நுணுக்கக் கலைஞர்கள் எல்லோரும் கூடி கலையை விலையாக்குகிறார்கள். ஆனால் அதிலும் நாணயம் இருக்க வேண்டும் என்பதே என் ஆசை.

நான் பெற்ற பாக்கியம்

இருபத்தேழு வயதில் நான் ஆறு நாடகங்களை எழுதியிருக்கிறேன். அத்தனையும் இப்போது படமாகின்றன. ஒரு படம் கூட இன்னும் வெளிவராத நிலையிலும் நான் (ஆ)றுப் படங்களுக்குக் கதாசிரியனாக இருக்கிறேன் என்கின்ற அடக்கமான நிலையில் இவ கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். முக்கியமாகச் சொல்ல வேண்டுமானால், மூதறிஞர் ராஜாஜியின் 'திக்கற்ற பார்வதி' என்ற கதைக்கு நான் வசனம் எழுதுகின்ற பாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன்; ராஜாஜி திரையுலகத்தில் அதிக ஈடுபாடு கொள்ளாதவர். மூதறிஞர் அப்பேர்ப்பட்டவரின் கதையை முதல்முறையாக படமாக்குகிறார்கள். அதற்கு என்னை அஞ்சி முவி சார் அழைத்து வசனம் எழுதச் சொன்னார்கள். இப்பேர்ப்பட்ட வாய்ப்பை, நான் எழுதிய நாடகங்கள் தந்தன. அவைகளைப் பார்த்துப் பாராட்டியவர்கள் தந்தனர்.

இந்த நிலையில்; நான் நினைப்பது என்னவென்றால், தமிழனும், தமிழ்நாடும கலையை வளர்ப்பதில எவருக்கும் தாழ்ந்ததில்லை என்ற உணர்வு, உதிரத்தின் ஒவ்வொரு அணுவிற்கும் ஏற்படுகின்றது.

எடுத்துக் காட்டாகப் பார்த்தால், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நெஞ்சை அள்ளும் காப்பியங்களை எத்தனை தடவைகள், எந்த எந்தக் கோணத்தில் பிரித்துப் பார்த்தாலும் ஒவ்வொரு அத்தியாயமும் ஒவ்வொரு கதையாகும். அது பலமுறை முறை படமானது ஒன்றுகூட தோல்வியடையவில்லை.

கால் காசு பெருத கதைக்கு பல ஆயிரமா?

எல்லோருக்கும் தெரிந்த கதையாக இருந்தாலும், அதில் ஒரு போதனை இருந்து. பாத்திரங்களும், நிகழ்ச்சிகளும், நாம பார்த்தவர்களாக, கேள்விப்பட்டவர்களாக இருக்குமேயானால், ஒரு நாளும் தோல்வி பெருது. அதைவிட்டு, நம்பமுடியாத பாத்திரங்களும், நினைக்கமுடியாத நிகழ்ச்சிகளும் உள்ள கதைகளை, கதைகள் என்று சொல்லிக் கொள்வதில் எனக்கு என்றுமே விருப்பம் இருந்ததில்லை. இது மாதிரி கதைகளை பிறமொழியிலிருந்து வாங்கி, அதைப் படமாக்குவதில் நமது தயாரிப்பாளர்கள் மிகவும் ஆர்வமாக இருப்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. இதனை பொருளாதார ரீதியிலும், தயாரிப்பாளர்கள் திருப்தியாக இருக்கிறார்களா என்றால் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

நம் தமிழ் நாட்டில் எத்தனையோ இளைஞர்கள் நல்ல கதைகளை வைத்துக்கொண்டு நடுத்தெருவில் அலைந்து கொண்டிருக்கிறார்கள். திரைப்படத்தொழில் எல்லாவற்றிற்கும் சங்கம் சிபாரிசு செய்தல் என்பன போன்ற நல்ல காரியங்கள் நடக்கின்றன. அதே போன்றுகதாசிரியர்களுக்கும் ஒரு சங்கம் அமைத்து, நல்ல கதைகளைச் சிபாரிசு செய்தால், கலையை நம்பிப் பட்டினி கிடப்போரை வாழவைக்க முடியும்; அண்டை மொழிகளில் கால்காசுக்குப் பெருத கதைகளை பல ஆயிரங்கள் கொடுத்து விலைக்கு வாங்கி வேதனைப்படுவதைவிட, தயாரிப்பாளர்கள் தமிழ்நாட்டில் வாழும் எத்தனையோ கதாசிரியர்களை அவர்கள் வயிற்றில் அடிக்காமல் வாழ வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதன் மூலம் தாங்களும் வாழலாம். கதாசிரியர்களுக்குள்ளே ஒற்றுமையை வளர்த்துக்கொண்டு துணிவுடன் இதனை செய்யவேண்டும்.

தீமையை நன்மையாக்கும் கதைகள் தேவையில்லை

அப்போதுதான் திரைப்படங்கள் நன்றாக அமையும். ஏனென்றால் நல்ல கதைகள் இல்லாமல் நல்ல படங்கள் உருவாக முடியாது. நல்ல கதை கிடைத்துவிட்டால், நிச்சயமாக அதை தயாரிப்பாளர்கள், ஒளிப்பதிவாளர் எல்லோரும் சேர்ந்து அருமையாக உருவாக்கிவிடுவார்கள். கதாசிரியர்களும், நடைமுறையில் பார்க்கின்ற பாத்திரங்களைப் படைத்து, வாழ்க்கையிலுள்ள பிரச்சினைகளை நிகழ்ச்சிகளாக்கினால், அதற்கென்று ஒரு உண்மைத்துவம் கிடைக்கும். உண்மைத்துவம் இல்லாத கதைகளால் மனித இதயங்களில் ஊடுருவப் பாய முடியாது.

சமுதாயத்தில் நன்மைகள் குறைவு. தீமைகள் அதிகம்; அதற்காக தீமைகளையே நன்மைகளாக்கும் கதைகளை எழுதக்கூடாது. ஆயிரம் தீமைகள் நேர்ந்தாலும் இறுதியில் நன்மையே வெல்லும் என்ற அடிப்படையில் ஒவ்வொரு போதனையும் இருக்க வேண்டும்—இந்த எண்ணங்களுடன் தான் நான் தினமும் விழிக்கின்றேன். இந்த விழிப்பில் எப்போதும் ஒரு துடிப்பிருக்கும் என்ற நம்பிக்கையில் வெற்றியுடன் போகிக்கொண்டிருக்கின்றேன். பேனாவின் மூலம் உங்களுடன் உரையாடுகிறேன்.

உங்களுடைய தீவிரமான கருத்து பேதங்களையும் நல் வாழ்த்துக்களையும் கோருகின்றேன்.

அபிப்பிராய பேதங்கள் மூலம், விமர்சனக் கண்ணோட்டத்தில் நியாயமாக குறை நிறைகளைக் கூறும்போது வருவரும் என்னை போன்ற துடிப்புள்ள இளைய தலைமுறை உருவாக, முன்னேற அவை உயர்ந்த வழியாக அமைகிறது.

அந்த வழி தமிழ் பெருமக்களாகிய உங்களுடையது. அந்த வழியில் நடைபோடும் என்னைப் போன்றவர்களை வாழ்த்தி வரவேற்க வேண்டியவர்களும் நீங்கள் தான்.

Printed by S. V. G. Sowrirajulu at the M. G. P. P. S. Press, No. 4, South Bank Road, Madras-28 and Published by him for the Madras Co-operative, Printing and Publishing Society Ltd.

Chief Editor:
S. V. G. Sowrirajulu,

Honorary Editor:
N. Muthukumaraswamy

திரை உலகம்

டைரக்டர் திருலோகசந்தர் வாத்தியாரானர்

குழந்தைகளை முக்கியமாக வைத்து "எங்கமாமா" படத்தை டைரக்ட் செய்த திருலோகசந்தர், இப்போது குழந்தைகளை மையமாக வைத்து "தீர்க்க சுமங்கலி" எனும் குடும்பச் சித்திரத்தை இயக்கி வருகிறார்.

முத்துராமனும் 3 குழந்தைகளும் சம்பந்தப்பட்ட காட்சி படமாக்கப்பட்டது. சாப்பாட்டு மேஜை எதிரில் அமர்ந்திருக்கும் குழந்தைகள் பள்ளியில் சொல்வதுபோல் 'பிரசண்ட் சார்' என்கின்றன.

உடனே குழந்தைகளின் தந்தையாக நடித்த முத்துராமன் "இது என்ன பள்ளிக்கூடமா" என்றார்;

சிறிய குழந்தை 'குட்மார்னிங் டாடி' என்றது.

இந்தக் காட்சியில் ஆரம்பத்தில் குழந்தைகள் சரியாக சொல்லி நடிக்கவில்லை.

டைரக்டர் பலமுறை சொல்லிப் பார்த்துவிட்டு கையில் பிரம்பை எடுத்துக்கொண்டு வாத்தியாராக மாறிவிட்டார்.

சிரித்துப் பேசி வேலை வாங்கிய டைரக்டர் கையில் பிரம்பை எடுத்துக் கொண்டு மிரட்ட ஆரம்பித்ததும் குழந்தைகள் ஒழுங்காக நடித்தன. அந்தக் காட்சி சிறப்பாகப் படமாக்கப் பட்டது.



'சூரிய காந்தி' படத்தில் முத்துராமன், ஜெயலலிதா.

திறமைமிக்கவர் உமாபதி: காமராஜ் பாராட்டு

ராஜராஜ சோழன் படத் தயாரிப்பாளர் ஜி. உமாபதிக்கு சென்னை அசோகா ஓட்டலில் பாராட்டு விழா நடைபெற்றது.

தென் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மணிவர்மா அனைவரையும் வரவேற்றார்.

பழைய காங்கிரஸ் தலைவர் காமராஜ் தயாரிப்பாளர் உமாபதிக்கு வெள்ளிக் கேடயத்தை வழங்கி, பொன்னாடை போர்த்தினார். அவர் பேசுகையில் கூறியதாவது:—

"உமாபதியைப் பாராட்டுவது என்னை நானே பாராட்டிக் கொள்வதுபோல. அவர் பாராட்டுக்குரியவர் என்பது ராஜராஜ சோழன் படத்தை எடுத்ததினால் மட்டுமல்ல, தொழில் துறையில் திறமையோடும் துணிவோடும் ஈடுபடுபவர்; வேறு யாருக்கு அந்தத் துணிவு வரும்? வெறும் துணிவு இருந்தால் போதாது. திறமையும், எடுத்த காரியத்தை சிறப்பாக முடிக்கும் சிரத்தையும் வேண்டும். உமாபதி எந்த காரியத்தில் ஈடுபட்டாலும் சிறந்தே இருக்கும். எந்த காரியத்தையும் பெரிய அளவில் திட்டம்போட்டு திறமையாக நடத்தி வெற்றிகாண வேண்டும் என்பதில் ஆர்வம் உள்ளவர்" என்று கூறினார்;

விஜயகமூர்த்தி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ராமச்சந்திரன், ராஜாராம் நாயுடு, சின்ன அண்ணாமலை ஆகியோர் பாராட்டிப் பேசினார்கள்.

தயாரிப்பாளர் உமாபதி பேசுகையில் டைரக்டர் அருட்செல்வர் ஏ.பி.என். சிவாஜி இருவரும் ஒத்துக் கொண்டதால் தான் நான் ராஜராஜ சோழன் படம் எடுக்கத் துணிந்தேன் என்று கூறி அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

நவரசா, ஜனரஞ்சனி சார்பில் நடைபெறும் மகேகர் நாடக விழாவை திருமுருக கிருபானந்தவாரியார் துவக்கி வைத்து வாழ்த்தினர்.



திரைப்படக் கல்லூரி மாணவர்கள் தயாரித்த படங்கள்

ஒவ்வொரு ஆண்டும் பூனா திரைப்படக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள், புதிதாக திரைப்படங்கள் தயாரிப்பார்கள். சிறந்த படம் தயாரித்த கலைஞர்களுக்கும் நடித்த நடிகர்—நடிகைகளுக்கும் ஆண்டு இறுதியில் பட்டம் வழங்கப்படும்.

கடந்த ஆண்டு பூனா திரைப்படக் கல்லூரியில் உருவாக்கப்பட்டு பரிசுபெற்ற சினிமாக்களின் காட்சி சென்னையில் நடைபெற்றது.

தேர்ந்த கலைஞர்கள், உருவாக்கிய படங்களைப் போல அருமையாகத் தயாரித்துள்ளனர்.

சிறு சிறு சம்பவங்கள்—வாழ்க்கையில் அன்றாடம் நிகழ்வதை அமைத்து 20 நிமிடங்கள் ஓடும் படங்களைத் தயாரித்துள்ளனர்.

கள்ளநோட்டு, பஸ் டிக்கெட், திக்கு தெரியாத காட்டில், தெருநாய், நோயாளி ஆகிய படங்கள் மிக உயர்வாக படமாக்கப்பட்டுள்ளன. மனதைக் கவரும் வகையில் மாணவர்களால் தயாரிக்கப் பட்ட படங்கள் தரமாகவும், சிறப்பாகவும் உள்ளன.

நடிகை ஜெயா எழுதும் "ஆசைக் கனவு" கட்டுரை "நவமணி" மே, 9-ம் தேதி இதழில் இடம் பெறும்